பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**22 05 2026 FRIDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தமிழகத்தில் காலியாக உள்ள அரசு பணியிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

3. திமுக ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

4. மேகதாது தொடர்பாக கர்நாடக துணை முதலமைச்சர் திரு D K சிவகுமார் தெரிவித்த கருத்துக்கு அஇஅதிமுக உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

5. உலக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<>>>>>

சர்வதேச அமைப்புகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் சைப்ரஸ் அதிபர் திரு **Nikos Christodoulides**-வுடன் நடத்திய பேச்சுக்களுக்கு பின்னர் அவருடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசினார்.

மேற்காசிய மற்றும் யுக்ரைன் பிரச்சினைக்கு அமைதி பேச்சுக்கள் மூலம் தீர்வுகாண்பதற்கான எந்தவொரு நடவடிக்கைக்கும் இந்தியா ஆதரவு அளிக்கும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<>>>>>

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர்-ரை இன்று சந்தித்து பேசினார்.

சென்னையில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பு மரியாதை நிமித்தமானது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள அரசு பணியிடங்களை விரைவில் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அமைச்சர் திரு சரத்குமார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இன்று சென்னையில் மனிதவள மேலாண்மைத்துறை சார்பிலான திட்டங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ஊழல் அற்ற நிர்வாகத்தை உறுதி செய்யும் வகையில், வெளிப்படைத் தன்மையுடன் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு சரத்குமார் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் திமுக ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படும் என்று அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், அமைச்சர்களாக பொறுப்பேற்றுள்ள திரு வன்னி அரசு மற்றும் திரு

ஷாஜகானுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு கட்சிக்கும் அரசியல் முடிவை தீர்மானிக்கும் உரிமை உள்ளது என்றும், இதனை கருத்தில்கொண்டு யாரையும் புண்படுத்தும்படி கருத்துகளை தெரிவிக்க வேண்டாம் என்று திமுக-வினரை கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

மேகதாது அணை கட்டுவதை எதிர்க்க தமிழகத்திற்கு உரிமை இல்லை என்று கர்நாடக துணை முதலமைச்சர் திரு D K சிவகுமார் கூறியிருப்பது கண்டிக்கத்தக்கது என்று அஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவிரி பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை மழுங்கடிக்கும் வகையில் கர்நாடகாவில் உள்ள காங்கிரஸ் அரசு செயல்பட்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள அரசு இதனை வேடிக்கை பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

காவிரி பிரச்சினையில் தமிழகத்தின் உரிமை விட்டுக்கொடுக்கப்படுவதை அஇஅதிமுக அனுமதிக்காது என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு வீரபாண்டியனும், கர்நாடக துணை முதலமைச்சரின் கருத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக இதுபோன்ற கருத்துக்கள் தெரிவிப்பது ஏற்படையது அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

மேகதாது அணை திட்டத்தை கர்நாடக அரசு உடனடியாக கைவிட வேண்டும் என்றும், இப்பிரச்சினையில் தவெக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

மதிமுக பொதுச்செயலாளர் திரு வைகோ-வும் கர்நாடக அரசின் செயலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், உச்சநீதிமன்றம் மற்றும் நடுவர் மன்ற தீர்ப்பை மீறி மேகதாது அணையை கட்ட கர்நாடகா முயற்சிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இப்பிரச்சினை தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை தமிழக அரசு விரைவுபடுத்தி, காவிரி உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்றும் திரு வைகோ வலியுறுத்தியுள்ளார்.

அமமுக பொதுச்செயலாளர் திரு டி டி வி தினகரன், திரு **D K** சிவகுமாரின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தருமபுரி புதிய பேருந்து நிலைய முறைகேடு தொடர்பாக உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினையில் தனியார் நிறுவனத்திற்கு சாதகமாக மாவட்ட நிர்வாகம் செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

முந்தைய திமுக ஆட்சியில் தொடங்கி, தற்போதைய மாவட்ட நிர்வாகம் வரை அனைத்து தரப்பினரும் மக்கள் நலனை பற்றி கவலைப்படாமல் செயல்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் நலனை கருத்தில்கொண்டு பழைய பேருந்து நிலையத்திலிருந்தே அனைத்து பேருந்துகளையும் இயக்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கோரியுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை — 57 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருச்சியில் தனியார் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்வதற்கான பணிகளை ஆட்சியர் திரு சரவணன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுக்கான கோடை சிறப்பு முகாமில் பங்கேற்றவர்களுக்கான பாராட்டு சான்றிதழ்களை ஆட்சியர் திருமதி சினேகா இன்று வழங்கினார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கான பணி நியமன ஆணைகளை வருவாய் அலுவலர் திரு நாராயணன் இன்று வழங்கினார்.

---------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை நகராட்சியில் புதிதாக கட்டப்பட்டுவரும் பேருந்து நிலைய கட்டுமானப்பணிகளை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

---------------

அரியலூர் மாவட்டத்தில் பள்ளி வாகன ஓட்டுநர்கள் பொறுமையாக வானங்களை இயக்க வேண்டும் என்று ஆட்சியர் திரு ரத்னசாமி அறிவுறுத்தியுள்ளார்.

---------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலில் ரோப் கார் சேவை பராமரிப்பு பணிகளுக்காக இன்று ஒருநாள் மட்டும் நிறுத்தப்பட்டது.

-------------

நீலகிரி மாவட்டம் குன்னூர் காட்டேரி பூங்காவில் மலைப்பயிர்கள் கண்காட்சி இன்று தொடங்கியது.

---------------

சென்னை மாநகர காவல்துறை ஆணையராக திரு அமல்ராஜ் இன்று பொறுப்பேற்றார்.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக பாரா டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

சீன தைபே-யில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Bhavina Patel** — கொரியாவின் **Sunghye Moon** இணையும், கலப்பு இரட்டையர் பிரிவில் **Bhavina Patel** — **Shubham Wadhwa** இணையும், மற்றொரு கலப்பு இரட்டையர் பிரிவில் **Vijaya Deepika Gangapatnam** — இந்தோனேஷியாவின் **Adyos Astan** இணையும் வெள்ளிப்பதக்கம் வென்றன.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **2** தங்கம், **3** வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

-----------------

தாஷ்கண்டில் நடைபெற்றுவரும் உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் **Pranati Nayak** மற்றும் **Protistha Samanta** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

----------------

லாவோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah — Diya Chitale** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **11-8, 7-11, 11-9, 11-8** என்ற செட் கணக்கில் ஜப்பானின் **Kazuhiro Yoshimura — Reina Aso** இணையை வென்றது.

----------------

ஆசிய **Teakwondo** சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Etisha Das** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**Ulaanbaataar-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **73** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

----------------------

ஃபெடரேஷன் கோப்பைக்கான தடகள சாம்பியன் போட்டி இன்று ராஞ்சியில் தொடங்கியது.

------------

18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப்போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Sweety Kujur தலைமையிலான இந்த அணியில், Shruti Kumari, Diya உட்பட 17 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி ஜப்பானில் வரும் 29-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 6-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

---------------

உலக மல்யுத்த சாம்பியன் போட்டி ஒத்திவைக்கப்படுவதாக அதற்கான சர்வதேச சம்மேளனம் அறிவித்துள்ளது.

பக்ரைனில் அக்டோபர் மாதம் 24-ஆம் தேதி தொடங்க இருந்த இப்போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தற்போது அங்கு நிலவும் சூழலை கருத்தில்கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<<END>>>>>**